


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



## THE WORD OF CHRIST

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக**

*கொலேசெயர் 3 : 16*

மரம் 1 செப்டம்பர் 2000 கனி 2

ஆசிரியர்

B. அர்ஜுனன்

**"கிறிஸ்துவின் வசனம்" மாத இதழ் உங்களுக்கு தேவையா?**

*கீழ்கண்ட விபரங்களோடு எங்களுக்கு எழுதுங்கள்.*

- *உங்கள் வீட்டு முகவரி ஆங்கிலத்தில் (மாவட்டம், பின் கோடு உட்பட)*
- *உங்கள் குடும்பத்திலுள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை?*
- *எந்த சபைக்கு செல்லுகிறீர்கள்?*
- *இவ்விதழை படிக்க விரும்புவதற்கான காரணம்?*
- *நீங்கள் ஒரு கிறிஸ்தவரா (அல்லது) புற மதஸ்தவரா?*



ஆசிரியர்

**எங்கள் முகவரி**

**Editor,**
P.O. Box : 5, Batlagundu 624202. Dindigul Dist, Tamilnadu, India.

**இதழின் உள்ளே . . .** **பக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி | 1 |
| 2. | பாவியின் ஜெபம் | 4 |
| 3. | தெரிந்து கொள்ளுங்கள் | 7 |
| 4. | படமும் சுருக்கமான வர்ணனையும் | 8 |
| 5. | செல்வாக்கு | 9 |
| 5. | தேவனே மனிதனை உயர்த்த வேண்டும் | 12 |
| 6. | ஒரு மனிதன் ஒரு ஸ்தரீயை பொது இடத்தில் பேசுவதற்கு அழைத்தால் என்ன? (பெண்கள் பகுதி) | 14 |
| 7. | ஒரு வழி – வேதாகமம் | 16 |
| 8. | பேதுருவின் அற்பவிசுவாசம் (சிறுவர் பகுதி) | 19 |
| 8. | புதிய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் | 20 |
| 10. | நடப்பு செய்திகள் | |

FOR FREE DISTRIBUTION

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
POST BOX No. 5, Batlagundu - 624 202. SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**THE WORD OF CHRIST**

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 1 | செப்டம்பர் 2000 | கனி 2

ஆசிரியருரை

# தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி

## A Chosen Generation



தேவனாகிய கர்த்தர் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்து அவர்களுடைய சந்ததிகளில் ஒரு குறிப்பிட்ட சந்ததியை மட்டும் தெரிந்து கொண்டு அவர்களை ஆசீர்வதித்து வந்திருக்கிறதை பரிசுத்த வேதாகமத்தின் துணை கொண்டு நாம் அறிந்து கொள்கிறோம். "நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்து கொண்டார். சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள். கர்த்தர் உங்களில் அன்பு கூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்க வேண்டும் என்பதினாலும்; கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப்பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்றும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக் கொண்டார்". *(உபா. 7:6-8)*

மேலுள்ள வசனத்தின்படி ஆபிகாமுக்கும், யாக்கோபுக்கும் கர்த்தர் கொடுத்த ஆணையைக் காக்கும்படிக்கும், இஸ்ரவேல் மக்களில் அன்பு கூர்ந்ததினால் அவர்களை பரிசுத்தப்படுத்தும்படிக்கும், தமது சொந்தமான ஜனங்களாய் இருக்கும்படிக்கும் அவர்களைத் தெரிந்து கொண்டார். அவர்களோ பார்வோனின் சமூகத்தில் அடிமைகளாக இருந்தனர். தம்முடைய தாசனாகிய மோசேயை எழும்பப்பண்ணி அவன் மூலம் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலரை அடிமைத் தனத்திலிருந்து விடுவித்து மாபெரும் அடையாளத்தோடும், அற்புதத்தோடும் அணியணியாய்ப் புறப்படப்பண்ணினார். எகிப்து முதல் கானான் வரை நாற்பது வருஷம் மன்னாவினால் அவர்களை போஷித்து, அவர்களது வஸ்திரம் மற்றும் பாதரட்சை முதலானவைகள் பழைமையாய் போகாதபடி தமது வல்லமையுள்ள கரத்தினால் அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்தினார்.

இப்படி அற்புதமாக வழிநடத்தின கர்த்தரை விட்டு தங்களுக்கு ஒரு தெய்வம் வேண்டுமென்று விக்கிரங்களை உண்டுபண்ணி தேவனுக்கு விரோதமாகக் கூக்குரலிட்டனர். மேலும் புறஜாதி முறைமைகளைக் கற்றுக் கொண்டு, தங்களுக்கு ஒரு ராஜாவைக் கேட்கும் போது தேவனாகிய கர்த்தர் சவுலை அவர்களுக்கு ராஜாவாகக் கொடுத்தார்.

சவுலை ராஜாவாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டு அவனுடைய ராஜ்யபாரத்தைப் பிடிங்கி ஈசாயின் மகனாகிய தாவீதுக்குக் கொடுத்தார். தாவீதோ, ஆடு மேய்ப்பனாயிருந்தான். இவனுடைய சந்ததியிலே நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறந்தார். தாவீதை கர்த்தர் தெரிந்து கொண்ட சம்பவம் ஒரு ஆச்சரியமான சம்பவம். சாமுவேலை நாம் நன்கு அறிவோம். நியாயப்பிரமாண காலத்தில் வாழ்ந்த ஒரு அற்புதமான தீர்க்கதரிசி. இவன் தேவாலயத்திலே வளர்க்கப்பட்டவன். சிறு பிரயாயத்திலே கர்த்தர் தம்மோடு பேசும் போது" சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்று மறுமொழி கொடுத்தவன். இந்த தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் பேசி ஈசாயினிடத்திற்கு அனுப்பினார். இவன் அவ்வூர் மூப்பர்களோடு சென்று ஈசாயின் பிள்ளைகள் வர கட்டளையிட்டான். அப்பொழுது, "அவன் எலியாபைப் பார்த்தவுடனே : கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்படுபவன் இவன் தானாக்கும் என்றான். கர்த்தர் சாமுவேலை நோக்கி நீ இவனுடைய முகத்தையும் இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்: மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" (1 சாமு. 16:6-7) என்றார்.

அநேக சமயங்களில் நாமும் கூட தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களை அசட்டை பண்ணுகிறோம். மாமிசக் கண்களினால் பார்த்து நமக்குப் பிடித்த நல்ல சிவப்பாகவும், உயரமாகவும், அழகாகவுமிருந்தால் இவர் நல்ல ஊழியர் என்போம். சற்று கருப்பாகவும், பல்நீண்டும், குட்டையாகவும் இருந்தால் இவரா ஊழியர்? கசாப்புக் கடையிலே கறிவெட்டுகிறவர் போலிருக்கிறாரென்று ஏளனமாகச் சொல்வோம். இதே போல் தான் சாமுவேலும் நினைத்திருக்கக் கூடும். இதற்கு கர்த்தர் கூறும் பதிலைப் பாருங்கள், மனுஷன் முகத்தைப் பார்ப்பான் கர்த்தரோ இருதயத்தை பார்க்கிறார் என்றார்.

ஈசாயின் மகன் எலியாபை கர்த்தர் தெரிந்து கொள்ளவில்லை. அதன்பின் ஈசாய் அபினதாபை சாமுவேலுக்கு முன்பாகக் கடந்து போகப்பண்ணினான். கர்த்தர் அவனையும் தெரிந்து கொள்ளவில்லை. அதன்பின் சம்மாவையும் கடந்து போகப் பண்ணினான். கர்த்தர் அவனையும் தெரிந்து கொள்ளவில்லை. இப்படியே அவன் ஏழுகுமாரரையும் சாமுவேலுக்கு முன்பாகக் கடந்து போகப் பண்ணினான். ஏழுபேரையும் கர்த்தர் தெரிந்து கொள்ளவில்லை. பின்பு சாமுவேல் உன்பிள்ளைகள் இவ்வளவு தானா? என்று ஈசாயைக் கேட்டான். அதற்கு அவன் இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான் என்றான். உடனே ஆள் அனுப்பி

அவனை அழைத்து வரச் சொன்னான். அந்தப் படியே அழைத்து வந்த போது கர்த்தர் இவன் தான்! நீ எழுந்து இவனை அபிஷேகம் பண்ணு என்றார். அவ்வாறே தாவீது இஸ்ரவேல் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான். சவுலினிடமிருந்த ஆவியானவர் அவனை விட்டு நீங்கினார். தாவீதுக்கு ஆவியானவர் கொடுக்கப்பட்டார். இந்தப்படியே அந்நாளில் கர்த்தர் தாவீதை ராஜாவாக தெரிந்து கொண்டார் என்று வேதாகமத்தின் மூலம் நாம் தெரிந்து கொள்கிறோம்.

தேவன் நம்முடைய முற்பிதாக்களுக்குக் கட்டளையிட்டபடியே பரிசுத்த ஜனமாக அவர்களை சகல நல்வழியிலும் வழிநடத்திக் கொண்டு வந்தார். "யாக்கோபிலிருந்து ஒரு வித்தையும், யூதாவிலிருந்து என் மலைகளைச் சுதந்தரிப்பவரையும் எழும்பப் பண்ணுவேன்" (ஏசா. 65:9) என்ற தீர்க்கதரிசன வசனத்தின்படி ஆண்டவராகிய இயேசுவை யூதா கோத்திரத்திலிருந்து எழும்பப் பண்ணினார். பிதாக்களின் காலமுதல் இயேசுவின் பிறப்புவரை ஒரு சந்ததியைத் தெரிந்து கொண்டு ஆசீர்வதித்து வந்த தேவன் இப்பொழுது புறஜாதிகளிலுமிருந்து தெரிந்து கொண்டு இருதிறத்தாரையும் ஒரே சந்ததியாக மாற்றுகிறதை நாம் புதிய ஏற்பாட்டில் படிக்கின்றோம். "அவர் யூதரிலிருந்து மாத்திரமல்ல புறஜாதிகளிலுமிருந்து நம்மை அழைத்திருக்கிறாரே" (ரோம. 9 : 24). "அல்லாமலும் ஏசாயா முன்னே சொன்னபடி : சேனைகளின் கர்த்தர் தமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைக்காதிருந்தாரானால் நாம் சோதோமைப் போலாகி கொமெராவுக்கு ஒத்திருப்போம்" (ரோம. 9:29). இப்பொழுது நமக்கு நன்கு புரிகிறது ஏன் ஒரு சந்ததியை மட்டும் பிரித்து அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்திக் கொண்டு வந்தாரென்று!. அவர் அப்படி செய்யாதிருந்திருப்பாரானால் மனித வர்க்கமே சோதோம் கொமோரா பட்டணங்களைப் போல அழிந்து போயிருக்கும். ஒரு நல்ல விவசாயி தன் நிலத்தில் விழுந்த பலனில் நல்ல விதைகளை தனியே பிரித்து வைத்து பாதுகாப்பதைப் போல தேவன் அன்றுமுதல் இன்று வரை ஒரு சந்ததியை தெரிந்து கொண்டு வருகிறார். அந்த சந்ததி ***கிறிஸ்துவே.***

ஆண்டவராகிய இயேசுவை தெரிந்து கொண்ட தேவன், "இவர் என்னுடைய நேச குமாரன் இவருக்குச் செவி கொடுங்கள்" (லூக். 9:35) என்றார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தம்முடைய ஊழியத்திற்கென்று பன்னிரெண்டு சீஷர்களைத் தெரிந்து கொண்டார் (லூக். 6:13) அவருடைய சீஷர்களும் பரிசுத்த ஆவியின் உதவியோடு சபைகளுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் நிருபங்களை எழுதும் போது, "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்து கொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது : கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது" (1பேது. 1:2) என்று எழுதுவதை நாம் வாசிக்கின்றோம். மேலும் பேதுரு குறிப்பிடும் போது நீங்களோ உங்களை அந்த காரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை

அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும் ராஜரீகமாக ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயுமிருக்கிறீர்கள்" (1 பேது. 2:9) என எழுதுகிறார்.

பிரியமான சகோதரனே, சகோதரியே நீ கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாக ஒரு கிறிஸ்தவனாக அல்லது ஒரு கிறிஸ்தவளாக இருக்கின்றாயா? கிறிஸ்து இயேசுவைத் தரித்துக் கொண்ட ஒவ்வொருவரும் கிறிஸ்தவர்களே. இஸ்ரவேல் சந்ததியை ஆசீர்வதித்து வழிநடத்தி வந்த தேவன் இன்று இயேசு கிறிஸ்துவின் மூலமாக உலகத்தை இரட்சிக்கத் திட்டமிட்டு பல பிரிவினை மார்க்கங்கள் நிறைந்த இவ்வுலகத்தில் இயேசுவை நமக்காக ஒரே பலியாக ஒப்புக் கொடுத்து புதிதும் ஜீவனுமான மாக்கத்தை உண்டு பண்ணினார். இம்மார்க்கம் நம்மை நித்தியத்திற்கு நேரே வழிநடத்தும். இதற்கு கிறிஸ்துவே தலையாக இருக்கிறார். இங்கே சந்தோஷமும் சமாதானமும் உண்டு. இதை நீங்கள் விசுவாசித்துப் பற்றிக் கொண்டால் இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வாதம் பெறுவீர்கள். இன்றே, தேவன் தெரிந்துகொண்ட இந்த பரிசுத்த சந்ததியில் அங்கமாக முயற்சியுங்கள். கர்த்தர் தாமே உங்களை தாம் தெரிந்து கொண்ட சந்ததியில் அங்கமாக்குவாராக!

## பாவியின் ஜெபம் \ THE SINNER'S PRAYER

***J.C. Choate***

ஒரு போதகர், தனது சபையாரை நோக்கி தன்னோடு சேர்ந்து பாவியின் ஜெபத்தை ஜெபிக்கச் சொல்லுவதைக் கேட்பது, இந்நாளில் புதுமையான காரியம் ஒன்றும் அல்ல. பல போதகர்களால் பலமுறை இது நடத்தப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட எந்தவொரு ஜெபமும் சுவிசேஷத்தில் இல்லை என்பதை நீங்கள் அறியும் போது அதிர்ச்சி அடையக்கூடும். அப்போஸ்தலர்களோ அல்லது அவர்கள் நாளிலுள்ள நற்செய்தி போதகர்களோ இவ்வாறு தங்களோடு சேர்ந்து பாவியின் ஜெபத்தை ஜெபித்திடும் ஒரு உதாரணத்தை நாம் எங்கும் படிக்க முடியாது.

பாவியின் ஜெபம் என்றழைக்கப்படும் ஜெபம் கர்த்தரால் உண்டானதல்ல; மனிதன் உண்டு பண்ணியது அது மட்டுமல்ல, அது சுவிசேஷத்திற்கு விரோதமான ஜெபம். என்னுடைய பாவங்களை மன்னியும் என்று ஒருவர் கேட்டவுடனேயே அவருடைய பாவங்களிலிருந்து கர்த்தர் மன்னிக்க வேண்டுமென்று அந்த ஜெபம் கர்த்தரிடம் கேட்கிறது. சுவிசேஷத்தில் இப்படிப்பட்ட காரியத்தை நீங்கள் எங்குமே படிக்க இயலாது. ஒரு தடவை கூட நீங்கள் காண முடியாது. எனவே, இப்படிப்பட்ட பாவியின் ஜெபத்தை போதகர்கள் பயன்படுத்தும் போது, கேட்பவர்களை அவர்கள் ஏமாற்றுகின்றனர். மேலும் இப்படிப்பட்ட ஜெபத்தை பயன்படுத்துகிறார்கள் என்ற உண்மையே, அவர்கள் கள்ளப் போதகர்கள் என்பதைக் காட்டுகிறது.

ஒரு பாவி தேவனுடைய பிள்ளை அல்ல, மாறாக அவன் சாத்தானின் பிள்ளை எனவே தான் அவன் பாவி, தன்னை இரட்சிக்க வேண்டுமென்று சாத்தானிடம் கேட்பது நிச்சயமாக அவனுக்கு உதவப் போவதில்லை. ஏனெனில் இரட்சிப்பு பணியில் சாத்தான் இல்லை. ஆனால், ஒரு பாவி தேவனுடைய பிள்ளை இல்லையென்றால் தேவன் அவனுடைய பிதாவாக இல்லாமலிருக்கும் போது தேவனை அவன் எப்படி தனது பிதா என்று அழைக்க முடியும்? மேலும் தேவன் அவனுடைய பிதா இல்லையென்றால், அவனுடைய ஜெபத்தை அவர் கேட்கவும் அதற்குப் பதிலளித்து அவனை இரட்சிக்கவும், அதின் மூலமாக தேவன் அவனுடைய பிதாவாகவும் இருக்க வேண்டுமென்று எப்படி அவன் எதிர்பார்க்கலாம்?

இப்போது இது உங்களுக்குப் புதுமையாகத் தோன்றக்கூடும். ஏனெனில், இதைப் படிக்கும் அநேகர் இரட்சிக்கப்பட நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், தேவன் உங்களை இரட்சிக்கும் படியாக பாவியின் ஜெபத்தை சொல்ல வேண்டுமென்று தான் எப்போதுமே கூறக்கேட்டு வருகின்றனர். ஆனால் அது முற்றிலுமாக தவறான எண்ணம்.

பார்வையற்ற ஒரு மனிதனை இயேசு குணப்படுத்தினாரே உங்களுக்கு நினைவிருக்கிறதா? இக்காரியங்களைப் பற்றி அவன் என்ன சொல்லவிருக்கிறான் என்பதைக் கேளுங்கள். ஆனால் அவன் ஒரு மனிதன் தானே என்று நீங்கள் சொல்லக்கூடும். அவன் ஒரு மனிதன், ஒரு பார்வையற்ற மனிதன், கிறிஸ்து சுகப்படுத்திய ஒரு மனிதன். அவன் என்ன கூறினானோ அதுவும் தேவ ஏவுதலால் சொல்லப்பட்டது. கிறிஸ்து அதை மறுக்கவில்லை. அவன் சொன்னான். "பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார்". (யோவான் 9:31) அவன் கூறியதைக் கேட்டீர்களா? பாவிகளுக்குத் தேவன் செவி கொடுப்பதில்லை என அவன் சொன்னான். பாவிகளுக்கு ஏன் அவர் செவி கொடுப்பதில்லை? ஏனெனில் அவர்கள் அவருடைய புத்திரர்களும், புத்திரிகளும் அல்ல. அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் செவி கொடுப்பதாக இருந்தால், முற்றிலும் பாவியான ஒருவனைவிட ஒரு கிறிஸ்தவனுக்கு உள்ள அனுகூலம் என்ன? கவனியுங்கள். நான் எனது பிள்ளைகளின் விருப்பத்தைக் கேட்டு, அது அவர்களுக்கு நல்லதாக இருந்தால், அவைகளை நிறைவேற்றுவேன். ஆனால் அப்படிப்பட்ட வேண்டுகோள்களை எனது பிள்ளைகள் அல்லாதவர்கள் விடுத்தால், அவர்களுக்கு அவற்றைச் செய்யமாட்டேன். இப்போது, எல்லோரும் பொதுவான ஒரு முறையில் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் மீண்டும் பிறந்து தேவனுடைய பிள்ளையாக மாற, ஜெபத்தின் மூலமாக தேவனுடைய பிள்ளையாக இல்லாத ஒரு பாவியை, மன்னிப்பதாக கர்த்தர் எங்கும் வாக்களிக்கவில்லை.

சுகப்படுத்தப்பட்ட அந்த மனிதன் என்ன சொன்னான் என்பதை மீண்டும் நினைவு கூறுங்கள். பாவியின் ஜெபத்தை தேவன் கேட்பதில்லை

என்று சொன்னது மட்டுமல்லாமல், மாறாக கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றி, அவரைத் தொழுது கொள்ளுகிறவர்களின் ஜெபத்தை அவர் கேட்பதாகச் சொன்னான். கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுவது யார்? (யோவான் 4:24) தேவனுடைய பிள்ளை அல்லது பிள்ளைகள். அப்படியானால் ஒருவன் தேவனுடைய பிள்ளையாக மாறுவது எப்படி? பரலோகத்தின் பிதாவின் சித்தத்தின்படி செய்ய வேண்டும். மத்தேயு 7:21-23 வசனங்களை வாசியுங்கள்.

ஆனால், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் காணப்படும் எல்லா மனந்திரும்புதல்களிலும், நற்செய்தி போதிக்கப்பட்டதையும், பாவிகள் அதைக் கேட்டு, தேவன் பேரிலும் கிறிஸ்துவின் பேரிலும் அவர்கள் விசுவாசம் வைத்து, தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, தங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பு பெற அல்லது இரட்சிக்கப்பட தண்ணீரில் முழுகி திருமுழுக்குப் பெற்றார்கள் என்பதையே நீங்கள் காண்பீர்கள். அப்போஸ்தலருடைய நடபடி 2, 8, 9, 16, 22 ஆகிய அதிகாரங்களைப்படியுங்கள். அப்போஸ்தலருடைய நடபடி புத்தகத்தை முழுவதுமாகப் படியுங்கள். அதில் சொல்லப்பட்டபடி செய்தவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் அல்லது மறுபடியும் பிறந்து, தேவனுடைய பிள்ளைகளாயினர், கர்த்தருடைய சபையில் அங்கத்தினராயினர் (மாற்கு 16: 16 யோவான் 3:3-5; கலா 3:26, 27)

மேலே சொன்ன எல்லாவற்றிலும் எங்காவது பாவிகளின் ஜெபம் என்பதாக ஏதாவது சொல்லப்பட்டுள்ளதா? பேதுரு, பவுல் அல்லது வேறு போதகர்கள் எவராவது பாவியின் ஜெபத்தை தங்களோடு சேர்ந்து செய்ய மக்களிடம் கேட்டுக் கொண்டார்களா? இல்லை. ஏனெனில் மக்களை இரட்சிக்க கர்த்தரின் வழி அதுவல்ல.

ஒருவன் கிறிஸ்தவனாகும் போது, அதாவது தேவனுடைய பிள்ளையாக மாறும் போது, அவன் பாவம் செய்தால், அவனுடைய பிதாவை அழைத்து தனது பாவத்தை மன்னிக்க வேண்டலாம். "நீங்கள் சொஸ்தமடையும் படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. "(யாக்கோபு 5:16) 1 யோவான் 1:5-10 வசனங்களையும் படியுங்கள்

நீங்கள் ஒரு கிறிஸ்தவரல்லாவிட்டால், நீங்கள் இரட்சிக்கப் படவும், தேவனுடைய பிள்ளையாக மாறவும், கர்த்தருக்குச் சொந்தமானவர்களுக்காக அவர் வைத்துள்ள சகல சலுகைகளையும் ஆசீர்வாதங்களையும் பெறவும், இன்றே கர்த்தருக்குக் கீழ்ப்படிய உங்களை வேண்டுகிறோம். பின்னர் நீங்கள் அவருடைய சித்தத்தின்படியாக ஜெபித்தால் அவர் உங்கள் ஜெபத்தைக் கேட்பார், அதற்குப் பதில் அளிப்பார். ( 1 யோவான் 5:14, 15)

**தமிழில் எஸ்.எஸ். ராஜன்**



# தெரிந்து கொள்ளுங்கள்

## ஒரு உண்மை நூலாசிரியர்

வேதாகமம் என்பது ஒரு புத்தகமாக இருந்தாலும் அது பல புத்தகங்களை உள்ளடக்கியுள்ளது. இந்தப் புத்தகங்கள் பரிசுத்த ஆவியினால் உந்தப்பட்ட ஏறக்குறைய 40 எழுத்தாளர்களால் எழுதப்பட்டன. அவர்கள் 60 தலைமுறைகளை உள்ளடக்கிய 1,500 வருட காலகட்டங்களில் வாழ்ந்தவர்கள்.

வேதாகமத்தின் கடைசி எழுத்தாளர் 1,900 வருடங்களுக்கு முன்பு மரித்தார். பல எழுத்தாளர்கள் ஒருவரையொருவர் சந்தித்தது கிடையாது. அவர்கள் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்தார்கள்.

வேதாகமத்தின் எழுத்தாளர்கள் பல வகையான தொழில்களில் ஈடுபட்டிருந்தார்கள். பல்வேறுபட்ட சமுதாயத்தில் வாழ்ந்தார்கள். வேறுபட்ட கல்விநிலையைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் அரசர்களாகவும், வேதசாஸ்திரிகளாகவும், எழுத்தாளர்களாகவும், மருத்துவர்களாகவும், உக்கிராணக்காரர்களாகவும், மேய்ப்பர்களாகவும், மீனவர்களாகவும், இன்னும் பலவித தொழில்களைச் செய்பவர்களாகவும் இருந்தனர்.

வேதாகமம் பல்வேறுபட்ட எழுத்தாளர்களால், பல்வேறுபட்ட காலங்களில் பல்வேறுபட்ட மொழிகளில், பல்வேறுபட்ட இடங்களிலிருந்து எழுதப்பட்டது என்றாலும் வேதாகமம் அளிக்கும் செய்தி அற்புதவிதமாக ஒன்று பட்டதாகவும், ஒருங்கிணைந்தாகவும் உள்ளது. வேதாகமத்திற்கு ஒரு உண்மை நூலாசிரியர் இருந்தார் என்பது தெளிவாகிறது அந்த நூலாசிரியர் தேவனே.

**- Selected**

### வேத அறிவுப் போட்டி எண். 1ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வரையாடுகளுக்கும், குழிமுசல்களுக்கும் | – | சங். 104:18 |
| 2. | நீதிக்கு | – | ரோ. 6:19 |
| 3. | ஓய்ந்திருப்பான் | – | எபி. 4:10 |
| 4. | அலங்காரமாயிருக்கடவது | – | I பேது. 3:4 |
| 5. | ஆசீர்வாதம் | – | நீதி. 20:21 |
| 6. | ஏசா | – | ஆதி. 27:34 |
| 7. | பரலோகத்தில் | – | மத். 18:10 |
| 8. | எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கரும் | – | அப். 17:18 |
| 9. | குமாரனையாகிலும், குமாரத்தியையாகிலும் | – | எசே. 14:20 |
| 10. | ஆசகேல் | – | II சாமு. 2:18 |

# கிறிஸ்துவுடனே கூட பரிசுத்தவான்கள் இணைக்கப்பட்டனர்!

## *Saints Linked Together with Christ!*

**கிறிஸ்து**

தேவன்
கீழே இறங்கினார்

"நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும், தம்முடனே கூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே" [Iதெச. 5:10]

| | | |
|---|---|---|
| ஒருவன் சிலுவையிலறைப்பட்டவனாயிருக்க வேண்டும் .. | கிறிஸ்துவுடனே கூட ...................... | கலா. 2 : 20 |
| ஒருவன் அடக்கம் பண்ணப்பட்டவனாயிருக்க வேண்டும். | கிறிஸ்துவுடனே கூட ...................... | ரோம. 6 : 3- 5 |
| ஒருவன் உயிர்பிக்கப்பட்டவனாயிருக்க வேண்டும்............ | கிறிஸ்துவுடனே கூட ...................... | எபே. 2 : 1, 5 |
| ஒருவன் எழுப்பப்பட்டவனாயிருக்க வேண்டும் ................. | கிறிஸ்துவுடனே கூட ...................... | எபே. 2 : 7 |
| ஒருவன் பாடுபடும்படி இருக்கிறவன் ............................. | கிறிஸ்துவுடனே கூட ...................... | பிலி. 3 : 10, 11 |
| ஒருவன் சுதந்திரமாக்கப்பட்டிருக்கிறவன்.......................... | கிறிஸ்துவுடனே கூட ...................... | கலா. 3 : 28, 29 |
| ஒருவன் அமர்த்தப்பட்டிருக்கிறவன் .................................. | கிறிஸ்துவுடனே கூட ...................... | எபே. 2 : 7 |
| ஒருவன் மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறவன் ...................... | கிறிஸ்துவுடனே கூட ...................... | ரோம. 8 : 16-18 |

**பரிசுத்தவான்கள்**

மனிதன் மேலே
உயர்த்தப்பட்டான்

"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்" (எபே. 2:7)

**Dillard Thurman**

# செல்வாக்கு

- P.R. Swamy

ஏவாள், ஏதேன் தோட்டத்தில் விலக்கப்பட்ட கனியை பறித்து தானும் புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்ததாக வேதாகமத்தில் பார்க்கிறோம். ஏவாளின் செல்வாக்கிற்கு, ஆதாம் பலியாகி தானும் விலக்கப்பட்ட கனியை புசித்த பாவத்திற்குள்ளாகி, அதன் பிரதிபலன் மனுக்குலத்தை பாதிக்கும்படி நடந்தான். சமுதாயத்தை பாதிக்கும் பணியில் பெண் செயல்படுவது இது தான் முதல் முறை. ஒரு ஆணிடத்தில் தனக்கிருந்த பெரிய செல்வாக்கையே ஏவாள் தன் செயலின் மூலம் வெளிப்படுத்துகிறாள். மனுஷனுடைய விலாவிலிருந்து எடுக்கப்பட்டவள். ஆதாம் அவளுக்கு 'ஏவாள்' என்று பெயரிட்டான். அதன் பொருள் மனிதனை உருவாக்க, முழுமையாக்க, அழகுபடுத்த படைக்கப்பட்டவள். இங்கு அவளுடைய ஊழியத்தின் சிறப்பு விளங்குகிறது. இதை நிறைவேற்ற அவள் தன் செல்வாக்கை பயன்படுத்திமனிதனை உருவாக்க வேண்டியவளாக இருக்கிறாள்.

வேதாகமத்திலே, ஆணிடத்தில் தன் செல்வாக்கை பயன்படுத்தும் பெண்கள் வரிசையில் ஏவாளே முதல் இடம் பெறுகிறாள். அடுத்தபடியாக அடிமை பெண்ணாகிய ஆகார் விஷயத்தில் சாராளும் தன் புருஷன் மீது செல்வாக்கை பயன்படுத்தினாள். இருப்பினும் அவளுக்கு ஆபிரகாம் ஆண்டவராக இருந்தார். தெலில்லாள் தன் கெட்ட செல்வாக்கை சிம்சோன் மீது பயன்படுத்தி அவன் வீழ்ச்சிக்கு, காரணமாயிருந்தாள். சரியான இடத்தில் அன்பு செலுத்தப்படா விட்டாலும், ஒரு பெண்ணின் சக்தி எவ்வளவு பெரியது என்று பாருங்கள். சாலமோனை அரச பதவியில் அமர்த்த பெத்சேபாள் தாவீது மீது செல்வாக்கை பயன்படுத்தினாள். இஸ்ரவேலை பாவம் செய்யும்படி, கொடுமைக்காரியான யெசபேல், ஆகாபின் மீது செல்வாக்கை பயன்படுத்தினாள். அரசியலிலும், மத விஷயத்திலும் இவளுக்கு எப்பேர்பட்ட செல்வாக்கு இருந்திருக்க வேண்டும். ஏரோதியாள் தன் செல்வாக்கை பயன்படுத்தி யோவான் ஸ்நானகனை சிரச்சேதம் செய்தாள். தேவன் செல்வாக்கை பெண்களுக்கு கொடுத்திருந்தும், அவற்றை தங்கள் சுய சித்தத்திற்கு பயன்படுத்தாமல் சமுதாயத்தை உருவாக்கும் பணியில் உபயோகிக்கவே விரும்புகிறார்.

இன்று சமுதாயம் இவ்வளவு சீர்குலைந்து ஒழுக்கங் கெட்டு இருப்பதற்கு பல காரணங்கள் இருப்பினும், முதன்மையான காரணமாக, பெண்கள் தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி சமுதாயத்தை உருவாக்கும் பணியில் தங்கள் கடமையை செய்ய முன் வராததே என்று கூறுவேன். அது எப்படி என்றால், இன்றைய குழந்தைகள் தான் வருங்கால சமுதாயத்தில் முக்கிய பங்கை ஏற்கப் போகிறவர்கள். இந்த குழந்தைகள் எவ்வாறு உருவாக்கப்படுகிறார்களோ அதைப் பொருத்தே வருங்கால சமுதாயத்தின் முன்னேற்றமும் இருக்கும்.

உதாரணமாக, வேதாகமத்தில் யாக்கோபு ஒரு சூழ்ச்சிக்காரனாக தன் தாயாகிய ரெபெக்காளால் உருவாக்கப்படுகிறான். ஒரு குடும்பத்தில் தகப்பன் ஒரு பிள்ளையையும், தாய் ஒரு பிள்ளையையும் பிடித்தமானவர்களாக வைத்திருப்பது எவ்வளவு பயங்கரம். ரெபெக்காள் அழகுள்ளவள், இருப்பினும் தன் மகன் யாக்கோபை ஒரு உயர்ந்த மனிதனாக உருவாக்காமல், அவனை தனக்கு பிடித்தமானவனாக வைத்திருந்தாள். தாயைப் போலவே மகனும் பேராசையுள்ள சூழ்ச்சிக்காரனாக மாறினான். ஆகையினால் தான் அந்த சாபம் என் மீது சுமரட்டும் என்றாள். இன்றைய சமுதாயம் இவ்வளவு ஒழுக்கங்கெட்டிருப்பதற்கு தாய்மார்கள், தங்கள் குழந்தைகளை உருவாக்குவதில் தங்கள் கடமையை சரிவர செய்யாததே. வெறும் பிள்ளைகளை பெற்று விட்டால் மாத்திரம் போதாது. தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை என்பதற்கிணங்க, தாய் தான் பிள்ளைகளை உருவாக்குபவளாக இருக்கிறாள். தகப்பனுக்கு இதில் பங்கில்லை என்று நான் கூறவில்லை. பிள்ளை பிறந்து வளரும் ஆரம்ப கட்டத்தில் உருவாக்கும் பணி, தாய் குலத்திற்கே சேரும். என்ன விதை அந்த குழந்தைப் பருவத்திலே போடுகிறார்களோ, அதைப் பொறுத்தே அது வளர்ந்து மாறவேண்டியதாக இருக்கிறது.

ரோம சக்கரவர்த்தி நீரோ மன்னனின் தாய் ஒரு கொலைகாரி அவள் மகளும் அவளை ஒரு நாள் கொன்று விடுகிறாள். இன்றைய சமுதாயத்தில், நாகரீகத்தின் வெறி தலைவிரித்தாடும் இந்நாட்களில் நல்ல பெண்களை காண்பது அரிது. தொட்டிலாட்டும் கை தான் உலகை ஆளும் என்ற முதுமொழிக்கிணங்க தாயானவளே பிள்ளைகளை உருவாக்குகிறவர்களாக வருங்கால சமுதாயத்திற்கேற்றவனாக படைக்க வேண்டிய முக்கிய பொறுப்பில் இருக்கிறாள். இது தானாக செயல்படும் என்று இருந்துவிட்டால் முடியாது. 24 மணி நேரமும் இதற்காக தங்கள் உடல், பொருள், ஆவி, ஊண், உறக்கம் இவைகளை தத்தம் செய்து உருவாக்க வேண்டிய காரியம். இதற்குத் தான் தாய் வீட்டில் தரித்திருக்க வேண்டும். தன் குழந்தைகளை வேலைக்காரியின் கையில் கொடுத்துவிட்டு, கிளப், சினிமா, அலுவலகம் என்று சுற்றித் திரிந்தால் எப்படிப்பட்ட சமுதாயம் உருவாகும் என்று பாருங்கள் அப்பொழுது யாருக்கு லாபம்? பிசாசுக்குத் தான்

அன்புள்ள சகோதரியே, வீட்டுக்கு திரும்பி செல், தேவன் பிள்ளைகளை உருவாக்கும் அந்த பொறுப்புக்கு உங்களை அழைக்கிறார். இவை எல்லாவற்றிற்கும் அஸ்திபாரமாக விளங்குவது கிறிஸ்தவ இல்லம், அந்த இல்லத்தில் புருஷனும், மனைவியும் கிறிஸ்தவர்களாக தேவனுக்கு ஒப்பு கொடுத்து ஜீவித்து, பவுல் கூறிய புத்திமதி பிரகாரம் கணவன், மனைவியை நேசித்து, மனைவி தன் கணவனுக்கு எல்லா காரியத்திலும் கீழ்படிந்து, பெற்றோரும் பிள்ளைகளை கோபப் படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ந்து, பிள்ளைகள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்படிந்து, இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிள்ளைகள் உருவாக்கப்பட்டால் தான் புதியதொரு சமுதாயத்தை உருவாக்க முடியும். பெற்றோர்கள் செய்யும் பெரிய தவறு, தம் பிள்ளைகளின் மதிப்பை

உணராதது தான். பிள்ளைகளை அலட்சியமாக பெற்றோர் எண்ணக் கூடாது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே இப்படிப்பட்ட மனோநிலையை கண்டித்து இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து, எரேமியா தீர்க்கதரிசி கூறியது, "ஐயோ, தங்கத்துக்கொப்பான விலையேறப் பெற்ற சீயோன் குமாரர் குயவனுடைய கைவேலையான மண் பாண்டங்களால் எண்ணப்படுகிறார்களே." (புல. 4:2)

இல்லத்தில் கிறிஸ்து மகிமைப்படுத்தப்பட்டு தேவனுடைய வார்த்தையால் அலங்கரிக்கப்பட வேண்டும். அவருடைய வசனத்தை மதித்து செயல் படுகிறவர்களாக இருக்க வேண்டும். பெற்றோர், பிள்ளைகள் முன்பாக ஒரு மாதிரியான ஜீவியத்தை ஜீவிக்கிறவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தன்னையுமறியாது குழந்தைகள் தகப்பனுடைய கெட்ட மாதிரியை பற்றிக் கொள்ளும். பின்பு அதை விடுவதென்பது சுலபமான காரியம் அல்ல. பெற்றோர்கள் பொறாமை, குரோதம், பகையுணர்ச்சி, வைராக்கியம் போன்ற தீய உணர்ச்சிகளுக்கு ஒப்புக் கொடுத்து நடப்பதை, குழந்தைகள் பார்த்து அது கெட்ட சுபாவம் என்பதை அறியாமல் அந்த பிஞ்சு உள்ளத்தில் ஏற்றுக் கொள்வார்களேயானால், பெரியவர்களாகும் பொழுது அதே சுபாவத்தை தங்கள் ஜீவியத்தில் வெளிப்படுத்துவார்கள். சிறு பிள்ளைகள் தானே ஆகட்டும், இப்பொழுது போகட்டும், பெரியவர்கள் ஆன பிறகு திருத்திக் கொள்ளலாம் என்றால் இதன் பிரதிபலனை நிச்சயமாக அனுபவிப்போம். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? இன்றே ஆரம்பமாக வேண்டும். இதுவே தருணம்.

பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியில் அவனை நடந்து அவன் முதிர்ந்த வயதிலும் அதை விடாதிருப்பான் என்றார் ஞானி சாலமோன், அதற்கு தான் பெற்றோர்கள் முதலில் தேவனுடைய பிள்ளைகளாக உண்மை கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும். பின்பு வேதவசனப்படி, கிறிஸ்தவ இல்லறத்தை அமைக்க வேண்டும். தினசரி குடும்ப ஆராதனை செய்ய வேண்டும். கிறிஸ்துவை மகிமைப்படுத்தி, அவருடைய போதனைகளின் பிரகாரம் இல்லத்தில் உள்ள ஒவ்வொருவரும் நடக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் பிள்ளைகள் உருவாக்கப்பட வேண்டும். இது ஒன்று தான் வளமான சமுதாயத்திற்கு ஒரே நம்பிக்கை.

அன்புள்ள சகோதரியே, உன் இல்லம் ஒரு கிறிஸ்தவ இல்லறமா? நீ தேவனுக்கு கீழ்படித்திருக்கிறாயா, அவருடைய போதனைகளை கடைப்பிடித்து நடக்கிறாயா? புதிய ஏற்பாட்டில் எலிசபெத் சகரியா தம்பதிகளைப் பார். "அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும், நியமங்களின் படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்". நீயும் கர்த்தரிட்ட கற்பனைகளின் படி நட. நீ உன் பிள்ளைகளுக்கு முன்பாக நீதிமானாக இரு. அவர்களை உருவாக்கும் மகத்தான பொறுப்பை தேவன் உனக்கு கொடுத்திருக்கிறார். நீ என்ன செய்யப் போகிறாய்? முதலில் உன்னை தேவனுக்கு ஒப்பு கொடு. கர்த்தர் உன்னோடு இருந்து, உன் முயற்சியை ஆசீர்வதிப்பார்.

# தேவனே மனிதனை உயர்த்த வேண்டும்
# God only must exalt man

**John Prabhudass**



இன்று உலகில் நீ பெரியவனா, நான் பெரியவனா என்பதில் பலத்த போட்டி நடைபெறுகிறது. அதிலும் அடுத்தவர்களை சிறுமைப்படுத்திவிட்டு தன்னை உயர்த்திக் கொள்வதில் பேரானந்தம் அடைகிறவர்களும் இருக்கிறார்கள். ஏழைகளாயிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை புண்படுத்தி, கோபப்படுத்தி, துன்பப்படுத்தி அதில் சந்தோஷம் காண்கின்றவர்களும் நம்மிடையே உலாவிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்கள் ஏன் இவ்வாறு செய்கிறார்கள் என்று ஆராய்ந்துப் பார்த்தால் அகந்தை, மேட்டிமை எண்ணங்கள், கர்வம் இவைகள் தான் மிஞ்சும். ஞானி சாலமோன் சொல்கிறார். அகங்காரமும் இடும்புமுள்ளவனுக்கு பரியாசக்காரனென்று பெயர். அவன் அகந்தையான சினத்தோடே நடக்கிறான். (நீதி மொழிகள் 21:24)

சிலர் வீதிகளில் பல பேர் பார்க்கும்படி வணக்கம் எதிர் பார்ப்பவர்களும் இருக்கிறார்கள். தன்னைச்சுற்றி ஒரு கூட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு தன்னை ஒரு தலைவன் போல் காட்டிக் கொள்ளுவார்கள். இவர்களிடம் ஒரு தலைவனுக்குள்ள குணாதிசயங்களையோ, வணக்கம் எதிர்பார்ப்பவரிடம் வணக்கத்திற்குரியவரா என்று ஆராய்ந்துப் பார்த்தால் மிஞ்சுவதெல்லாம், அவர்களிடம் காணப்படும், தற்பெருமையும், வீண்புகழ்ச்சியும் ஆகும் வேதாகமம் சொல்கிறது. விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தை வெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள். (மத்தேயு 23:6,7) எனவே நீங்கள் பெரியவர்களாயிருக்க விரும்பினால் நீங்கள் வேலை செய்கிறவர்களாயுமிருக்க வேண்டும். "உங்களில் பெரியவனாயிருக்க விரும்புகிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன்" (மத்தேயு 23:11)

இந்தக் காரியத்தில் இயேசு கிறிஸ்துவை எடுத்துக் காட்டாக கொள்ளலாம். நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து பாவமில்லாதவராக இருந்தும், சிலுவையின் மரணபரியந்தம் தன்னைத் தாழ்தினார். எனவே பிதாவானவர் இயேசு கிறிஸ்துவை நான்கு இடங்களில் உயர்த்துகின்றார்.

**1. மரணத்தினின்று உயிர்த்தெழுகிறார்:-**

கிறிஸ்து மரித்த உடன் அவருடைய உடலுக்கு வெள்ளைப் போளமும், கரியபோளமும் இட்டு சீலைகளினால் சுற்றிக் கட்டி

ஒருவனும் வைக்கப்படாத ஒரு புதிய கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள். (யோவான் 19:39-41). அடக்கம் பண்ணப்பட்ட இயேசு கிறிஸ்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். "அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார் (லூக்கா 24:6)

**2. சகல அதிகாரமும் கொடுக்கப்படுகிறது :-**

பிதாவானவர் தன்னுடைய குமாரன் இயேசு கிறிஸ்துவை மிகவும் நேசித்ததினால் தன்னிடம் இருந்த சகல அதிகாரங்களையும் அவருக்குக் கொடுக்கிறார். இயேசு உயிர்த்தெழுந்த பிறகு பதினொரு சீஷர்களும் தங்களுக்கு குறித்திருந்த கலிலேயாவிலுள்ள ஒரு மலைக்குச் சென்று இயேசுவை கண்டு பணிந்து கொண்டார்கள். "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே இருக்கிறேன் என்றார் ஆமென். (மத்தேயு 28:16-20)

**3. தனது வலது பாரிசத்தை தருகிறார், ராஜ்யத்திற்கு தலையாக்குகிறார்:-**

கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்து பிதாவினிடத்திற்கு செல்கிறார். அங்கு தூதர்களும் உட்காரக்கூடாத இடத்தை அவருக்கு தருகிறார். "அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும், அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். (எபேசியர் 1:21-23)

**4. எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை தருகிறார்**

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமே ஏசாயா தீர்க்கத்தரிசி அவருடைய நாமத்தைக் குறித்து தீர்க்க தரிசனமாக உரைத்திருக்கிறார்." நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தர் வல்லமையுள்ள தேவன், நித்தியப்பிதா, சமாதானப் பிரபு எனப்படும் (ஏசாயா 9:6) இந்த தீர்க்க தரிசனம் இங்கே நிறைவேறுகிறது.

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர் பூமியின் கிழானோருடைய முழங்கள் யாவும் முழங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார். (பிலிப்பியர் 2:9-11)

எனவே தேவனானவர் உங்கள் ஒவ்வொருவரையும், உயர்த்தும் படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1 பேதுரு 5:6)

*அழிவுக்கு முன்னானது அகந்தை விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை (நீதி மொழிகள் 16:18)*

வேத வாக்கியங்களை படித்தால் மட்டும் போதாது, காரணம் அரசியல் தலைவர்களும் படிக்கிறார்கள். நடிகை, நடிகர்களும் படிக்கிறார்கள். கள்ள போதகர்களும் படிக்கிறார்கள். அதனால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. கைக்கொள்ளுவதே காரியம்.

# ஒரு மனிதன் ஒரு ஸ்தரீயை பொது இடத்தில் பேசுவதற்கு அழைத்தால் என்ன?

பெண்கள் பகுதி

## *What if a man calls on a Woman to speak publicly?*

**Betty Burton Choate**



'பெண்களின் விடுதலை' இயக்கங்கள் பெருகியுள்ள இந்நாட்களில் எல்லாவித வாக்குவாதங்களும், பொது இடங்களில் பெண்கள் தலைமை பொறுப்பேற்று செயல்படும்படிக்கு எடுக்கும் முயற்சிகளும் முன்னேற்ற மடைந்துள்ளன.

வேதவாக்கியங்கள் கூறுவதை தெளிவாக அறிந்து கொள்வோமானால் "உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரியானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை ........" (1 தீமோ. 2:12), "மூப்பர் அல்லது சபை மனிதர், ஸ்திரீயின் மேல் அதிகாரத்தை உடையவர்களாயிருக்கிறார்கள். ஸ்திரீயானவள் மூப்பருக்கு மட்டும் கீழ்ப்படிக்கின்றவளாய் இருக்கிறபடியினால் ஒரு மூப்பர் ஒரு ஸ்திரீயை சபையில் ஜெபிக்கும்படி அல்லது உபதேசபண்ணும்படி அழைத்திருந்தால் அது அனுமதிக்கப்பட்டதாயிருக்குமா? என்று கேள்வி கேட்கப்படுகிறது.

இது ஒழுங்குள்ளதாக தோற்றமளிக்கும். கடைசியில், புருஷர் தாமே அவளை ஜெபிக்கும்படி அல்லது உபதேசம் பண்ணும்படி கேட்கிறவர்களாயிருந்தால் எப்படி ஸ்திரீயானவள் புருஷன்மேல் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரமுடையவளாயிருக்க முடியும்? ஆனால் நாம் ஒரு மிக முக்கியமான காரியத்தை மறக்கக் கூடாது: ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார். ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறான் (1 கொரி 11:3). பரிசுத்த ஆவியின் அதிகாரத்தினால் வேத வாக்கியங்களெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது, மனித

எழுத்தாளர்களுடைய எண்ணங்களின்படியல்ல. அவர்கள் எழுதியபோது, புருஷர்கள் சபைக் கூட்டங்களில் தலைமைத்துவம் கொடுக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள், பரிசுத்த ஆவியானவர் என்ன கற்பித்தாரோ அதையே அவர்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். அந்த வார்த்தைகள் அவர்களது சொந்த வார்த்தைகள் அல்ல.


இன்று ஒரு மூப்பரோ அல்லது ஒரு புருஷனோ சபையில் ஒரு ஸ்திரீயை பலருக்கு முன் ஜெபிக்கும் படிக்கு அல்லது உபதேசம் பண்ணும்படிக்கு அழைக்கிறான் என்றால், அவன் அவளை வேதவாக்கியங்களின் தெளிவான கட்டளைகளை மீறப்பண்ணுகிறான். ஒரு மனிதன் ஸ்திரீயின் மேல் அதிகாரஞ் செலுத்தும் பொறுப்பில் இருப்பவன், இருந்த போதிலும் அவன் தேவன் மேல் அதிகாரமுடையவனாயிருக்க மாட்டான். இப்படிப்பட்ட காரியத்தைக் கேட்பது ஒரு அகந்தையான பாவச்செயல், இச்செயல் வேதவாக்கியத்தில் கடுமையாக கண்டனம் செய்யப்பட்டுள்ளது.

உபாகமம் புத்தகத்தில் இந்த விதமான கேள்விக்கு உவமானத்தைப் பெற்றிருக்கிறோம். தேவன், குறிப்பிடும் போது ஒரு தீர்க்கதரிசியாகிலும், சொப்பனக்காரனாகிலும் (அதிகாரத்தை உரிமை பாராட்டுகிற சிலர்) இஸ்ரவேலரை வழிவிலகப் பண்ண முயற்சித்தாலும், "குறிப்பாய்ச் சொன்னாலும்", "அடையாளமும் அல்லது அற்புதமும்" நடந்தாலும் "நாம் மற்ற தெய்வங்கள் பின்னே செல்வோம்" எனச் சொன்னாலும் "நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குச் செவி கொடாதேயுங்கள் ..............." "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக் கொள்வீர்களாக, அந்தத் தீர்க்கதரிசியும் அந்த சொப்பனக்காரனும் கொலை செய்யப்படக்கடவன்; ஏனென்றால் உங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு நீங்கள் விலகும்படி அவன் பேசினான் ............." (உபா.13:2-3). என்று கூறினார்.

மோசேயின் கட்டளையின் கீழ் அல்லது தேவனுடைய கட்டளைகளை மீறினவர்களைக் கொலை செய்யும்படி அதிகாரமுடைய தேவனுடைய பிள்ளைகளின் காலத்திலும் நாம் வாழவில்லை. ஆனால் நாம், அவர் என்ன சொல்லுகிறார் என்று கேட்பதின் முக்கியத்துவத்தையும் அவரது வார்த்தைக்குக் கீழ்படிதலின் முக்கியத்துவத்தையும் மட்டுப்படுத்தி விடக்கூடாது. தேவனுடைய கட்டளைகளை மறுபடியும் எழுதுவதும், அவர் ஏற்படுத்தியுள்ள அதிகாரத்தின் ஒழுங்கை மாற்றியமைப்பதும் எந்த மனுஷன் மேலும் அல்லது ஸ்திரீயின் மேலும் விழும் கடுமையான குற்றமாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நிச்சயமாக இப்படிப்பட்ட பாவக்குற்றத்தைப் பெற்றிருக்க எந்த கிறிஸ்தவனும் விரும்பமாட்டான்.



**தமிழில் : J. குளோரி அர்ஜுனன்**




# ஒரு வழி

## வேதாகமம் - The Bible

**பாடம்-5**

***- Roger Dickson***

**பா**வத்திற்கு பரிகாரம் காணும்படிக்கு, நாம் பாவம் செய்கிறதை எதிர்க்கின்றவருடைய போதனைகளுக்கு நாம் செவிகொடுக்க வேண்டியது அவசியமாகும். இவ்வாறாக, வேதாகமத்தில் நமது பாவத்திற்குப் பரிகாரத்தை வெளிப்படுத்தியிருக்கிற தேவனிடத்திற்குத் திரும்பவேண்டும். அவரது போதனைகளை நாம் கருத்தாய் பின்பற்ற வேண்டும். பாவமன்னிப்புக்கென்று நமது சொந்த சமய முறைமைகளைக் கற்பிக்க முடியாது. பாவத்தின் பிரச்சனைகளை நாம் எப்படி சமாளிக்க வேண்டும் என நமக்கு தேவனுடைய வழிநடத்துதலாயிருக்கிற வேதாகமத்திற்கு மட்டுமே நாம் திரும்பவேண்டும்.

வேதாகமத்தைப்பற்றி, தேவன், "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." *(11தீமோ. 3:16.17)* எனக் கூறுகிறார்.

'ஆவி' (உள்ளுணர்வு) என்ற வார்த்தையின் பொருள் தேவசுவாசம் என்பதாகும். இவ்விதமாக வேதாகமமானது தேவனால் தேவனுடைய சுவாசமாக வெளிப் படுத்தப்பட்டுள்ளது. இது வாழ்வில் நாம் நடந்துகொள்வதற்கென்று நமக்கு தேவனுடைய வெளிப்பாடாகும். இது நமது வாழ்க்கையை தேவனுடைய சித்தத்தின்படி நடத்திச்செல்வதற்கு வழிகாட்டும் சட்டமாயிருக்கிறது. ஆனபடியினால், தாவீது அவனது வாழ்க்கையில் எண்ணினதுபோல் நாம் தேவனுடைய வார்தையை கவனத்தில் கொள்ளவேண்டும். அவன் எழுதியபோது, "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என்பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (சங்.119:105) என்றான். இவ்விதமாக நாம் தேவனுடைய வார்தையின் மேல்



பசியும் தாகமும் கொண்டவர்களாயிருக்க வேண்டும் (மத்.5:6) தேவனுடைய வார்த்தையாகிய உணவின்மேல் அதிக வாஞ்சையுள்ளவர்களாயிருக்க வேண்டும் (1பேது. 2:2).

தேவனுடைய வார்த்தை நமது வாழ்க்கையை மாற்றக்கூடியது. ஏனென்றால் இது தேவனுடையது. "தேவனுடையவார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப்பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபி.4:12).

தேவன், நாம் அவருடைய வார்த்தைக்குக் கீழ்படியவேண்டுமென எதிர்பார்க்கிறார். நம் வாழ்வில் தேவனுடைய வாத்தைக்குக் கீழ்படியும் செயல் நமது ஜீவியத்தில் ஆவிக்குரிய சிறந்த வளர்சியைக் கொண்டுவரும். வேதம் நம்மைப்பார்த்து, "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்" என்று சொல்லுகிறது (2பேது.3:18). இயேசுவை அறிகிற அறிவின் பிறப்பிடமே நமது வேதாகமம்தான். ஆனபடியினால், பவுல் "...நீங்கள் பக்திவிருத்தி யடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்" எனகுறிப்பிட்டுள்ளார் (அப்.20:32). வேதாகமத்தை அறிகிற அறிவில் நாம் வளரும்போது, இயேசுவை அறிகிறஅறிவில் நாம் வளருகிறோம். இந்த அறிவு நம்மைத் தட்டி எழுப்புகிறது. இது தேவனது வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைக்கு கீழ்படியும் போது இச்செயலை உன் வாழ்வில் செய்யும். இது உன்னை கட்டி எழுப்பும். உனது ஐக்கிய நலனுக்கென்றுள்ள தேவனுடைய வார்த்தையைக் குறித்து பவுல் இங்கு கூறுகிறார்.

**"ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அதுமெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது" (1தெச.2:13).**

பாவத்திற்குப் பரிகாரம் வேதாகமத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிறந்த வாழ்விற்கான பரிகாரம் வேதாகமத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனபடியினால் நீ ஜீவனைப் பெற்றிருக்கும்படியும், அதைப் பரிபூரணமாகப் பெற்றிருக்கும் படியும் வேதாகமத்தைப் பற்றிய உனது அறிவு முக்கியமானது என்று வேதாகமம் கூறுகிறது. (யோவா. 10 : 10)


**தற்சோதனை**

1. ______ "தேவசுவாசம்" என்பதன் பொருள் என்ன? (A) விசுவாசம் (B) அன்பு (C) ஆவி (உள்ளுணர்வு)
2. ______ நமது பாதைக்கு வேதாகமம் என்னவாயிருக்கிறது? (A) கைவிளக்காக (B) வெளிச்சமாக (C) உள்ளுணர்வாக
3. ______ நாம் தேவனுடைய வார்த்தையைப் புசிக்கும் போது நமது வாழ்வில் என்ன நிகழ்கிறது? (A) ஆவிக்குரிய வளர்ச்சி (B) ஒன்றுமில்லை (C) அவநம்பிக்கை
4. ______ தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளதும் (A) நம்பிக்கையுள்ளதும் (B) வல்லமையுள்ளதும் (C) எழுதப்பட்டதும்
5. ______ இதைப் படிக்கிறவர்களுக்குள்ளும், நம்புகிறவர்களுக்குள்ளும் தேவனுடைய வார்த்தை என்ன செய்கிறது? (A) கிரியை செய்கிறது (B) ஒன்றுமில்லை (C) ஏற்க மறுப்பதை உண்டாக்குகிறது

**ஆம் / இல்லை :** தேவன் ஜீவிக்கிறபடியினால், தேவன் அவரது சித்தத்தை வெளிப்படுத்துவார் என்று நம்புவதும் அவரது சித்தத்திற்கு நாம் கீழ்படிவதும் விவேகமற்ற செயலா?

விடை 20ம் பக்கம் பார்க்கவும்

## வேத அறிவுப்போட்டி எண் 1ல் வெற்றிபெற்றவர்கள்

1. S. வைலட் மெர்ஸி - வத்தலக்குண்டு
2. A. மைக்கேல் ராஜ்குமார் - திண்டுக்கல்
3. V. கோவலன் - மதுரை
4. S. கிறிஸ்டியான் - சென்னை
5. M. ஜார்ஜ் - சென்னை
6. S. லலிதாபிரேமகுமாரி - மதுரை
7. A. அலிஸ்மேரி- வத்தலக்குண்டு
8. R. பெரியசாமி - செல்லூர்
9. V. ரவிமோகன் ராஜ் - குளத்தூர்
10. M. ரவி - கொடுவாய்
11. P. வினோத்குமார் - கொடுவாய்
12. A. மேரியம்மாள் - வத்தலக்குண்டு
13. N. கமலவேணி - சென்னை
14. N. ஜான்வெஸ்லி - உபதலை
15. M. ரோஸ்மேரி - சென்னை
16. A. ஜோதிகாந்தம் - பாண்டியநல்லூர்
17. A. கந்தசாமி - தெக்கலூர்

சிறுவர் பகுதி

# பேதுருவின் அற்பவிசுவாசம்



**வேதபகுதி : மத்தேயு 14 : 22-23**

அன்பான தம்பி தங்கைகளே பேதுருவைப்பற்றி நீங்க அதிகமா தெரிஞ்சுயிருப்பீங்க. நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஏதாவது ஒரு காரியத்தை குறித்து சொன்னா அதில் பன்னிரண்டு சீஷரில பேதுருவே முந்திக்கொள்வாரு. ஒரு முறை தம்முடைய சீஷர்களை படகில் ஏறி தமக்கு முன்னே அக்கரைக்கு போகும்படி அவர்களை துரிதப்படுத்தி அனுப்பி விட்டு ஆண்டவர் தனித்து ஜெபித்துக் கொண்டிருந்தார். அதற்குள்ளாக படவு நடுக்கடல் வரை சென்று எதிர்க்காற்றினால் அங்கும் இங்கும் அலைகளினால் அலைவுபட்டுக் கொண்டிருந்தது.

அப்பொழுது இரவின் நாலாம் ஜாமத்திலே இயேசு கடலின்மேல் நடந்து சீஷர்களிடத்தில் போனாரு, அதைக் கண்ட சீஷர்கள் பயந்து போய் ஆவேசம் என்று சொல்லி அலற ஆரம்பித்தாங்க, யாருக்குமே பயமாகத்தானே இருக்கும் இல்லையா, இந்த இராத்திரியில யாரு கடலிலே நடந்து வருவது யாருமே கடலிலே நடக்க முடியாதே என்றெல்லாம் யோசித்து பயந்து போய் பார்த்தாங்க உடனே இயேசு "பயப்படாதிருங்கள்" நான் தான் என்றார். அப்பொழுது தான் எல்லாருக்கும் பயம் போய் சந்தோஷமாயிருந்தாங்க. பேதுருவுக்கு தைரியம் வந்து தானும் கடலின்மேல் நடக்க ஆசைப்பட்டு ஆண்டவரே நீரேயானால் நான் கடலின்மேல் நடந்து உம்மண்டை வர கட்டளையிடும் என்றான்.

யாருக்குமே இப்படிப்பட்ட ஆசை இருக்கும், இல்லையா. இயேசு ஆண்டவர் பேதுருவின் விருப்பத்தை அறிந்து படவை விட்டிறங்கி வா என்றார். பேதுருவுக்கோ ஒரே பயம் படகை விட்டிறங்கி வர சொல்றாறே என்ன இது தரையா, கடலாச்சே நாம் நடந்தா கடலுக்குள்ளே போய் விடுவோமோ என்று அவிசுவாசத்துடன் இயேசுவண்டை போக கடலின்மேல் நடந்தான். அப்பொழுது காற்று பலமாக அடிக்கிறதைக் கண்டு பயந்து அமிழ்ந்து போகையில் ஆண்டவரே! என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு அவன் கையை பிடித்து அற்பவிசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்றார், பின்பு இருவரும் படகில் ஏறி மற்ற சீஷர்களோடு அக்கரைப்பட்டனர்.

நாமும்கூட இந்த பேதுருவைப்போல சில சமயங்களில் அவிசுவாச எண்ணங்கொள்கிறோம். இல்லையா, ஆண்டவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்து தேர்வு நன்றாக எழுதியிருப்போம். ஆனால் ரிசல்ட் வரும் போது அவிசுவாசம் வந்து எங்கே நான் பெயிலாயிடுவேனோ! என்ற சந்தேகம் ஏற்படும் போது அப்படியே ஆகிவிடும். இதை மேற்க்கொள்ள உங்கள் நம்பிக்கையில் உறுதியாய் இருங்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து பயத்தை புறம்பே தள்ளுங்கள்.

**மனப்பாட வசனம் :**

"உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன் மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்." *(I பேதுரு 1:21)*

பொருள் : தேவனுடைய வீட்டின் (சபையின்) ஒழுங்கு

ஆக்கியோன் : பவுல்

காலம் : 64-66 கி.பி.

**திட்டவரைக் குறிப்பு :**

A. சபையின் ஆவிக்குரிய ஒழுங்கு — 1 அதி

B. சபை ஊழியரின் பல்வேறு பணிகள் — 2 அதி

C. சபையில் பொதுவான உபதேசங்கள் — 3 அதி

**சிறப்புச் செய்தி :**

**A. சபைகளில் (பன்மையில்) மூப்பர்களை ஏற்படுத்த (தீத்து) வேண்டப்படுகிறார் 1:6**

**B. கள்ள உபதேசிகளின் முகமூடிகள் கிழிக்கப்பட வேண்டும். 1:10-16**

**வரலாற்று பின்னணி :**

கிரேத்தா தீவில் சுவிசேஷப் பணிக்காக பவுல் தீத்துவை அனுப்பி வைத்தார். கிரேத்தா தீவு 156 மைல் நீளமும் 30 மைல் அகலமுடையது. அப். 2:11ல் கிரேத்தா மக்கள் சிலர் எருசலமில் இருந்தனர் என வாசிக்கின்றோம்.

இத்தீவார் ஓயாப் பொய்யரும் பெரும் தீனிக்காரரும் சகல அசுத்தங்களையும் உடையவர்களாயிருந்தனர். ஆனால் இத்தீவில் மிகக் குறுகிய காலத்தில் சபை ஆரம்பிக்கப்பட்டு அதில் மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் நியமித்தனர். தீத்து 1:5-9.

A. மூப்பர்களை நியமித்தல்

B. சபையை ஒழுங்கு படுத்துதல்

***– Selected***

**ஒரு வழி**

| பாடம் 4ன் விடை | பாடம் 5ன் விடை |
|---|---|
| **1.B, 2.C, 3.B, 4.A, 5.A** | **1.C, 2.B, 3.A, 4.B, 5.A** |

**ஜெபியுங்கள்**

1. ரஷ்யாவில் நீர் மூழ்கி கப்பலில் இறந்த 118 பேருடைய குடும்பங்களுக்காக
2. காஷ்மீர் அமைதிக்காக
3. ஆந்திராவில் வெள்ள சேதத்தில் இறந்த குடும்பங்களுக்காக

## வேத அறிவுப் போட்டி எண். 2

குறிப்பு :

வேத அறிவுப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொருவரும் அஞ்சல் அட்டையில் மட்டுமே விடைகளை எழுதி அனுப்ப வேண்டும். அத்துடன் உங்கள் பதிவெண்ணையும் மறக்காமல் எழுதவும். விடைகள் இம்மாத இறுதிக்குள் வந்து சேரும்படி அனுப்புங்கள். 12 போட்டியில் வெற்றி பெற்று முதலாவது வருபவருக்கு சிறப்பான பரிசு காத்திருக்கிறது. தயவு செய்து உங்கள் சுயமுயற்சியில் கண்டு பிடியுங்கள்.


1. இயேசுவுக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்ற சீஷன் யார்?
2. தன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டுப்போனதை ஆண்டவருக்கு நேர்ந்து கொண்டு பலியிடுகிற கபடஸ்தன் எப்படிப்பட்டவன்?
3. எப்பிராயீமர் எவைகளினாலும் இஸ்ரவேல் வம்சத்தார் எதினாலும் என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
4. ஆமணக்கின்மேல் மிகவும் சந்தோஷமாயிருந்த தீர்க்கதரிசி யார்?
5. முதல்முதல் எந்தப் பட்டணத்திலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கப்பட்டது?
6. மெழுகு அக்கினிக்குமுன் உருகுவது போலத் துன்மார்க்கர் யாருக்குமுன் அழிவார்கள்?
7. நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, யாரிடத்திலிருந்து இறங்கி வருகிறது?
8. யாக்கோபிலிருந்து ஒரு வித்தையும், யூதாவிலிருந்து என் மலைகளைச் சுதந்தரிப்பவரையும் எழும்பப் பண்ணுவேன் என்று எந்த தீர்க்க தரிசன புஸ்தகத்தில் படிக்கின்றோம்?
9. சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ எக்கோபாக்கினை வரும்?
10. போஜனமானது நம்மைத் தேவனுக்கு உகந்தவர்களாக்குமா?

## நடப்பு செய்திகள்

1. *ஜனாதிபதி கே.ஆர். நாராயணனின் பரம்பரைச் சொத்தான கேரள வீடு ஆயூர்வேத ஆராய்ச்சி மையம் துவங்குவதற்காக நன்கொடையாக அளிக்கப்பட்டது.*
2. *2002ற்குள் அனைத்து கிராமங்களிலும் டெலிபோன் வசதி செய்து தரப்படும் என்று தொலை தொடர்புத்துறை அமைச்சர் பஸ்வான் தெரிவித்துள்ளார்.*
3. *"லெப்டோ ஸ்பைரோசிஸ்" என்ற (எலியால் பரவும்) நோயால் பாதிக்கப்படுபவர்களில் 40 சதவீதம்பேர் இறந்து விடுகின்றனர் என சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி டாக்டர். ரத்தினம் தெரிவித்துள்ளார்.*
4. *தமிழகத்தில் ஐந்தாயிரம் பட்டதாரி இளைஞர்களுக்கு இலவச கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது என ராமநாதபுர மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரி பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.*
5. *சிட்னியில் இம்மாதம் 15ம் தேதி துவங்கும் ஒலிம்பிக் போட்டியில் 116 பேர் கொண்ட இந்திய அணி கலந்து கொள்கிறது.*

Printed by V.D. Thankachan and published and owned by B. Arjunan and printed at Novelty Press, 3. Dhanappa Mudali street, Madurai-625 001. and Published from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. **Editor B. Arjunan.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



ஞாயிறு ஆராதனை : காலை 9.00 மணி

வியாழன் வேதவகுப்பு : மாலை 6.00 மணி

**All are Welcome**

**கிறிஸ்துவின் சபை**

17.2.102-D/5, ராஜன் நகர்

வத்தலக்குண்டு – 624 202.

திண்டுக்கல் மாவட்டம்

✆ : (04543) 23278

**Editor**


**THE WORD OF CHRIST**

Post Box No.5,

Batlagundu-624 202.

**Monthly Magazine**

**FOR FREE DISTRIBUTION ONLY**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| **HINDI** | Sunday<br>Thursday | 8.45 p.m 9.00 p.m<br>9.00 p.m 9.15 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| **ENGLISH** | Friday | 7.45 p.m 8.00 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | J.C. CHOATE |
| **TELUGU** | Sun,Mon<br>Tue,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| **TAMIL** | Sunday,<br>Tuesday,<br>Thursday<br>Friday | 6.45 p.m 7.00 p.m<br>5.30 p.m 5.45 p.m<br>5.45 p.m 6.00 p.m<br>5.30 p.m 5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| **MALAYALAM** | Friday | 3.45 p.m 4.00 p.m | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| **KANNADA** | Sunday | 1.45 p.m 2.00 p.m | 3/5, 7th A Main, Tatasilk Farm<br>Bangalore - 560028 | ROBERT RATHNAKAR |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST